## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

நியமம் 10 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானச் செலவுக்கணக்கில் சீராக்கப்பட வேண்டிய முன்னைய வருடத்தின் ரூபா 3,484,859 தொகையான வட்டி வருமானம் பெறுவனவு மற்றும் வரிச் சீராக்கங்கள் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

04 மாகாணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கல்வி அமைச்சுக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செலவு அறிவித்தல்களின் பிரகாரம் ரூபா 4,414,749 தொகையானது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தள்ளுபடி பதிவேடுகளின் பிரகாரம் அந்த 04 மாகாணங்களிலிருந்தும் ரூபா 6,145,940 தொகையான பங்களிப்புப்பணம் ஆசிரியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. இதனால் ரூபா 1,731,191 தொகை கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்**

திறைசேரி அச்சுப் பதிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் பெப்ரவரி மாத பங்களிப்புப் பணப் பெறுவனவு ரூபா 4,373,853 ஆக இருந்த போதிலும் கல்வி அமைச்சிலிருந்து அனுப்பப்பட்ட செலவு அறிக்கையின் பிரகாரம் அத்தொகை ரூபா 4,602,367 ஆனமையால் ரூபா 228,514 தொகையான இணக்கமின்மை வெளிப்படுத்தப்பட்டது.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் அவற்றிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் அங்கத்துவ பங்களிப்பு பணம் | 65,649,234 | வலயக் கல்விக் காரியாலயங்களில் இருந்து பெறப்பட வேண்டிய தள்ளுபடி பதிவேடு |
| (ஆ) | அங்கத்துவ பங்களிப்பு மீள் கொடுப்பனவு | 4,022,715 | தள்ளுபடிப் பதிவேடு மற்றும் பெறுவனவுகளைப் பதிவு செய்த புத்தகங்கள் |
| (இ) | பங்களிப்புப் பணம் கிடைப்பனவு-2011 திசெம்பர் மாதம் | 5,482,399 | கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட செலவு அறிவித்தல் அல்லது வலயக் கல்விக் காரியாலயங்களில் இருந்து பெறப்பட்ட தள்ளுபடி பதிவேடு |

**1.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச் சட்டத்தின் 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டளை இல. 9 (அ) | மேற்குறித்த கட்டளையின் பிரகாரம் நிதியத்தினால் பேணப்பட வேண்டிய பதிவேடுகள் எதுவும் பேணப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 0.2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியம் மீளாய்வு செய்த அவதானிப்புகளை உள்ளடக்கிய ஓர் அறிக்கை பொது நிதித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்நிதியத்தினை மேலும் பேணப்பட வேண்டுமா என்பது குறித்த தீர்விற்கு வருவதற்கு நிதி அமைச்சு தவறியிருந்தது. |
| (ii) 04.1 ஆம் பந்தி | பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 04.03 (ஊ) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதியத்தில் செலவிலுள்ள மீதியை திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்தமைக்கான சான்றிதழ் ஒன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 95,550,961 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 74,633,090 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 20,917,871 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் 28% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 1,348,754 ஆல் அதாவது 3.5% ஆல் குறைவடைந்திருந்தமை மற்றும் பங்களிப்புப் பணம் மீளச்செலுத்துதல் ரூபா 623,514 இனால் அதாவது 18.3% ஆல் உயர்வடைந்திருந்தமையும் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே பங்களிப்புப் பணப் பெறுவனவும் ரூபா 19,132,699 இனால் அதாவது 34% ஆல் அதிகரித்திருந்ததுடன் அவைகள் நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆசிரியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு பணத்தை அனுப்பி வைக்கும் நிதியத்திற்கு பங்களித்திருந்த ஆசிரியர்கள் தொடர்பான விபரம் அல்லது தனியார் பாடசாலை மற்றும் தர்ம பாடசாலைகள் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட பதிவேடு பேணப்படுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த பங்களிப்பு பணம் பெறுவனவு ரூபா 4.3 மில்லியன் முதல் ரூபா 7 மில்லியனுக்கு இடையிலான வீச்சில் நிலவுவதுடன் ஒவ்வொரு

மாத பங்களிப்பு பணம் பெறுவனவுகளின் தளம்பல்கள் இருந்தமை காணக்கூடியதாக இருந்தது. மாதாந்தம் பெறப்பட வேண்டிய பங்களிப்பு பணம் எவ்வளவு என்பதனை கணிப்பிடும் முறைமை நிதியத்திடம் காணப்படவில்லை. அதனால் காசாகப் பெறப்படும் பங்களிப்பு பணம் மாத்திரம் ஆண்டின் பங்களிப்புப் பணமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 16 மில்லியன் வட்டி வருமானம் நிதியத்திற்குக் கிடைத்திருந்த போதிலும் அப்பணத்திலிருந்து நிதியத்தின் ஓய்வூதியங்களைச் செலுத்துவதற்காக எவ்வித பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் இப்பணத்தில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற பங்களிப்பாளார்களின் பங்களிப்புப் பணத்தை மீளச்செலுத்துவதற்காக ரூபா 4,022,715 மாத்திரம் செலவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 12,147,088 தொகை முழுவதும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. சகல ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஓய்வூதியத் திணைக்களத்தின் கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் 2011 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதியத்திலிருந்து ஓய்வூதிம் பெறும் 796 நலனாளிகள் இருந்தமை காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களைப் பேணுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஓய்வூதியத் திணைக்களத்தின் மாதாந்த ஓய்வூதிய வகைப்படுத்தலின் பிரகாரம் நிதியத்தின் ஓய்வூதியமாக மாதமொன்றிற்கு ரூபா 1,005,765 தொகையளவில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் மூலம் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு பொருத்தமான முறையில் திருத்தங்கள் செய்வதற்காக நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிதியத்திடமுள்ள மேலதிக பணத்தினை முதலீடு செய்யும்போது திறைசேரி அங்கீகரித்திருந்த முதலீட்டு நிதிமூலங்களான நிலையான வைப்பு மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் எதிர்பார்க்கப்பட்ட இலாபங்களைக் கணிப்பிட்டு நிதியத்திற்கு சாதகமான முதலீடுகள் எது எனதீர்மானம் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின்போது ரூபா 116,347,993 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதியத்திற்கு உயர்வான வட்டி வருமானமொன்றை உழைக்கும் சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) தள்ளுபடிப் பதிவேடு பராமரிக்கப்படுதல்

(இ) முதலீடு